**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 115 of 2017

| | | | |
|---|---|---|---|
| Name | : | திருமதி. ஜெகதாம்பாள் | வா.சா.1 |
| Father's Name | : | சந்தியாகு | |
| Village | : | பார்வதியாபுரம் | |
| Taluk | : | மானூர் | |
| Calling | : | இல்லத்தரசி | |
| Age | : | 70 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.09.2019

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :

இந்த வழக்கை எனது கணவர் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி தான். அவர் உடல் நிலை சரியில்லாததால் நான் சாட்சியம் அளிக்கிறேன். எனது கணவருக்கு உடல் நிலை என காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எனது கணவரும் பிரதிவாதியும் சகோதரர்கள் என்றால் சரி தான். அன்னம்மாளுக்கும், ஆதாமுக்கும் பிறந்தவர் தான் பிரதிவாதி என்றால் சரி தான். அன்னம்மாளுக்கும், யோசேப்புக்கும் பிறந்தவர் தான் எனது கணவர் என்றால் சரி தான். எனது கணவருடன் ஜோதி மணி என்ற பெண்ணும் பிறந்தார் என்றால் சரி தான். ஜோதிமணி போக அந்தோணியம்மாள் என்ற சகோதரியும் எனது கணவருடன் பிறந்தார். ஜோதிமணியும் அந்தோணியம்மாளும் இறந்து விட்டார்கள். இந்த வழக்கை எந்த புல எண்ணிற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் புல எண்.189க்காக தாக்கல் செய்துள்ளேன். பிராதில் புல எண்.189/1 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனது கணவர் ஞாபக சக்தி இல்லாமல் தவறாக குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.6ல் 2006ம் ஆண்டிலேயே பிரதிவாதி பேங்க் ஆப் பரோடா வங்கியில் கடன் பெற்றுள்ளார் என்றால் சரி தான். எனது கணவர் ஆரம்பத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு அ.வ.எண்.11/2008 என்றால் சரி தான். அந்த வழக்கில் எனது கணவர் பட்டா படி இடத்தை நிர்ணயம் செய்து கேட்டுள்ளார் என்றால் பத்திரப்படி

நிர்ணயம் செய்து தர கேட்காமல் தவறுதலாக பட்டா படி நிர்ணயம் செய்து கேட்டுள்ளார். அந்த வழக்கில் பாகப்பிரிவினை பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால் ஞாபக சக்தி இல்லாமல் அந்த பரிகாரத்தை கோரவில்லை. பிராதில் அ.வ.எண்.11/2008 விளம்புகை, நிரந்தர உறுத்துக் கட்டளை மற்றும் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக நினைவில்லை. பாகப்பிரிவினை கேட்டுள்ளதாக எனது கணவர் சொன்னார். வா.சா.ஆ.5ல் எந்த இடத்திலாவது பாகப்பிரிவினை என்ற வாசகம் இல்லை என்றால் தெரியவில்லை. பழைய வழக்கில் பாகப்பிரிவினை எதுவும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.11/2008 வழக்கில் பிராது 1வது தபசில் சொத்தில் பட்டா எண்.227ன் படி சொத்தை நிர்ணயம் செய்து தரவும் பிராது 2வத தபசில் சொத்து இந்த பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது எனவும் விளம்புகை செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மொத்த விஸ்தீரணம் 15 ஏக்கர் 90 செண்டு என்றால் சரி தான். நான் பிராதில் சொல்லியுள்ளது போல புல எண்.189/1ல் 2 ஏக்கர் 57 செண்டு என்ற நிலமே இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.227 எனது கணவர் பெயரில் உள்ளது என்றால் சரி தான். அந்த பட்டாவில் புல எண்.189/1ல் 1.50 ஏர்ஸ் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். ஆனால் எங்களுக்கு 1 ஏக்கர் 28 1/2 செண்டு பாத்தியம். பட்டா எண்.227ல் புல எண்.182/2எ மற்றும் 2பி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எங்களுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்டது. புல எண்.182ல் எங்களுக்கு மட்டுமே பாத்தியம் என்றால் சரி தான். புல எண்.183/1ல் எங்களுக்கு 42 ஏர்ஸ் பாத்தியம் என்றால் சரி தான். பிரதிவாதிக்கு புல எண்.183/2ல் 28 ஏர்ஸ் பாத்தியம் என்றால் ஒவ்வொரு புல எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் பாத்தியம் என்று நினைவில்லை. பிரதிவாதிக்கு மொத்தமாக 3 ஹெக்டேர் 19 ஏர்ஸ் பட்டா எண்.474 மூலமாகவும் எனது கணவருக்கு பட்டா எண்.227ன் படி 3.17 ஹெக்டேர் புஞ்சை நிலமும் 10 ஏர்ஸ் நஞ்சை நிலமும் பாத்தியம் என்று பட்டாவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது அனைத்து

சொத்துக்களையும் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து அளப்பதற்கு சம்மதமா என்றால் சம்மதம் தான். உயில் படி அளப்பதற்கு சம்மதம். உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணம் எனது மாமனாருக்கு பிரதிவாதி 22.08.1951 அன்றும் அதே தேதியில் பிரதிவாதிக்கு எனது மாமனாரும் 2 கிரைய பத்திரங்கள் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரி தான். அந்த கிரைய பத்திரங்கள் 15.90 ஏக்கரை பிரித்து கொண்டோம் என்று காட்டுவதற்காக எழுதப்பட்டுள்ளது என்றால் சரி தான். 2006ல் பிரதிவாதி வங்கிக்கு அடமானம் எழுதி கொடுத்த விவரம் அ.வ.எண்.11/2008 வழக்கு தாக்கல் செய்த போதே தெரியும் என்றால் சரி தான். என்னுடைய பிராதில் 26.01.2017 அன்று பிரதிவாதி வில்லங்கம் செய்த போது தான் பிரதிவாதி மேற்படி இடத்தை வங்கிக்கு அடமானம் வைத்துள்ள விவரம் தெரியும் என பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு 94 வயது என்றால் சரி தான். எனது கணவரை விட அவர் வயது மூத்தவர் என்றால் சரி தான். இந்த வயதான காலத்தில் அவரை கஷ்டப்படுத்துகிறோம் என்றால் சரியல்ல. அ.வ.எண்.11/2008 வழக்கில் முதல் நிலை தீர்ப்பாணை என எதுவும் பிறப்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பு வரை என்னுடைய கணவர் யாருடைய அரவணைப்பில் எவ்வாறு வாழ்ந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது மாமனார், மாமியாரின் அரவணைப்பில் வாழ்ந்தார் என எனது கணவர் சொல்லி தெரியும். ஆதாம் உயிருடன் இருந்த போதே எனது மாமியார் யோசேப்பை திருமணம் செய்து கொண்டார் என்றால் இல்லை. எனது கணவர் ஆதாம் உயிருடன் இருந்த போதே யோசேப்பை திருமணம் செய்து கொண்டதாக அ.வ.எண்.11/2008ல் கூறியிருந்தால் அது தவறா என்றால் எனது கணவர் ஞாபக மறதியில் கூறியிருக்கலாம். 10 வருடங்களுக்கு முன்னரும் எனது கணவருக்கு உடல் நிலை சரியில்லாமல் தான் இருந்தது. அ.வ.எண்.11/2008ல் பிறந்த தீர்ப்புக்கு மேல் எந்த மேல் முறையீடும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். வா.சா.ஆ.10லேயே பட்டா எண்.227 என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான். பட்டா எண்.227 தவறு

என கோட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அவ்வாறு மனு கொடுத்ததை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.வ.எண்.11/2008 வழக்கு நீதிமன்ற ஆணையரின் அறிக்கையின் படி தான் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் எனக்கு நினைவில்லை. புல எண்.189/1ல் 1 ஏக்கர் 27 1/2 செண்டை அனுபவித்து வருகிறோம் என்று காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் உயிலில் உள்ளதால் வேறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 உயிலில் 2ம் பக்கத்தில் புல எண்.189ல் ஏக்கர் 2 செண்டு 57 ஆக மொத்தம் ஏக்கர் 15 செண்டு 89 பிரிவின்றி பேர் பாதி என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒவ்வொரு புல எண்ணிலும் பாதி பாத்தியம். ஒவ்வொரு புல எண்ணிலும் பாதி பாத்தியம் என வா.சா.ஆ.1ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. புல எண்.189/2ல் பிரதிவாதியை தவிர எங்களுக்கு எந்த உரிமையும் அனுபவமும் இல்லை என்றால் சரியல்ல. அதே போல புல எண்.189/1ல் இந்த பிரதிவாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தான் தவறாக புரிந்து கொண்டு வழக்கை தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆதியில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.11/2008 வழக்கின் அடிப்படையில் அவரவர் இடம் அவரவர் அனுபவத்திலும் ஆளுகையிலும் உள்ளது என்றால் இல்லை. அ.வ.எண்.11/2008 வழக்கு தீர்ப்பின் பிரகாரம் வாதியாகிய நாங்களும் பிரதிவாதியும் அவரவர் இடத்தை அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வளர்ச்சி தாங்காமல் தான் இவ்வாறான பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.